**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 292/2022

பெயர் : பொன்னுசாமி (DW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 04.11.2025

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து காழியப்பநல்லூரில் உள்ளது. சர்வே எண்.372/14 . விஸ்தீரணம் 120 குழி. 33 1/3 செண்ட் என்றால் சரிதான். கணக்கு படி 33 1/3 செண்ட் என்பது 100 குழி தான் வரும் என்றால் சரிதான். தாவா சொத்து அமிர்தலிங்கம் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். 30.07.2020 ல் நானும், என் தந்தையின் மற்ற வாரிசுகளும் சேர்ந்து தாவா சொத்தை வாதிக்கு கிரயம் கொடுத்தோம் என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட கிரயம் தான். வா.சா.ஆ.1 தான் வாதியின் கிரய ஆவணம் என்றால் சரிதான். அதில் நானும் கையெழுத்து போட்டுள்ளேன், மற்ற வாரிசுகளும் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதில் கிரய தொகை ரூ.28,000/- என்று போடப்பட்டுள்ளது. கிரய ஆவணத்துடன் என் தந்தை பெயரில் உள்ள பட்டாவும் சேர்ந்து உள்ளது என்றால் சரிதான். அதில் 372/14-ல் 0.13.5 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கு 372/14-ல் 13 1/2 ஏர்ஸ் தான் சொந்தம் என்றால் சரிதான். தாவா கிரய தொகை ரூ.28,000/- பெற்று கொண்டதாக கிரய ஆவணத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். பூரா கிரய தொகையும் பற்றாகிவிட்டது என்று அதில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் படி கிரய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதால் எங்களுக்கு சொத்தில் உரிமை இல்லை என்றால் சரியல்ல, பூரா கிரய தொகையும் எங்களுக்கு வந்து சேரவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிக் கொடுத்தவர்களுக்கு கிரய தொகை பாக்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கிரய ஆவணம் வா.சா.ஆ.1 எழுதிக் கொடுத்தவர்களுக்கு எழுதிக் கொடுத்த பின்னர் சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணம் என் தந்தை பெயரில் உள்ள பட்டா என்றால் தவறான பட்டா, அது கிரம நிர்வாக அலுவலரால் ஜோடிக்கப்பட்டது. வா.சா.ஆ.1 னுடன் வா.சா.ஆ.8 பட்டா தான் இணைக்கப்பட்டுள்ளது என்றால் அது தவறானது, எங்கள் சொத்து 120 குழி 100 குழி என்று இந்த பட்டா ஏற்படுத்தப்பட்டுள்ளது. தாவா சர்வே எண்.372/14 ல் பூமியில் 13 1/2 ஏர்ஸ் தான்

உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 நான் வாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அதில் 7 1/2 செண்ட் கூடுதலாக உள்ளது என்றும், அதை வசம் ஒப்படைக்கும் படியும் கேட்டுள்ளேன் என்றாலும் சரிதான். அதற்கு வாதி பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3 கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் கூடுதல் இடம் இல்லை, 13 1/2 ஏர்ஸ் தான் பூமியில் உள்ளது என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். வாதி MKB சேம்பர் தொழில் நிறுவனம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பால் வாதி மிகுந்த மன உளைச்சல், மன வேதனையில் இருந்தார் என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பில் ரூபாய் ஒரு லட்சம் இழப்பீடு கேட்டு இருந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மீண்டும் நான் வாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அதில் 20 குழிக்கான தொகை கொடுக்கும் படியும், புறம்போக்கு நிலத்தை ஒப்படைக்கும் படியும் சொல்லியுள்ளேன் என்றால் எங்கள் சொத்து 120 குழி அதில் கிரயம் கொடுத்து 100 குழி தான், மீதி 20 குழிக்கு தொகை கேட்டேன். அரசு புறம்போக்கு நிலத்தை ஒப்படைக்க கேட்டுள்ளேன் என்றால் சரிதான். சரோஜினிக்கான கிரய பாக்கி தொகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளேன். வா.சா.ஆ.5 வாதி கொடுத்த பதில் அறிவிப்பு என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் சரியான விபரங்களை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் சரோஜினியும் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அறிவிப்பில் சரோஜினி பெயர் தவறாக குறிப்பிப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 வாதிக்கு நான் மீண்டும் கொடுத்த அறிவிப்பு என்றால் சரிதான். அதில் கிரயம் பாக்கி தொகை ரூ.3,40,000/- போக மீதி தொகை கேட்டுள்ளேன் என்றாலும், ஆனால் இந்த விபரம் வா.சா.ஆ.1 ல் இல்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள விபரம் உண்மை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள விபரம் தவறு என்று வேறு வழக்கு எதுவும் போடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 வாதி கொடுத்த பதில் அறிவிப்பு என்றால் சரிதான். அதில் உள்ள விபரங்கள் உண்மை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 எழுதிக் கொடுத்த பிறகு தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு விதமாக அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு சேர வேண்டிய தொகை கொடுக்காததால் அறிவிப்பு கொடுத்தேன். வா.சா.ஆ.7 ல் வாதி அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ரூபாய் 4 லட்சம், ஏற்கனவே ஒரு லட்சம் மொத்தம் 5 லட்சம் இழப்பீடு கேட்டுள்ளார் என்றால் எனக்கு தொகை சேர வேண்டும் என்பதால் நான் அறிவிப்பு கொடுத்தேன், அவர் இழப்பீடு கேட்பதில் எந்த நியாயமும் இல்லை. வாதிக்கு மூன்று

முறை கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வாதிக்கு ஏற்ப்பட்ட மன உளைச்சலுக்கு நான் ரூபாய் 5 லட்சம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.